# IN THE COURT OF DISTRICT MUNSIF CUM JUDICIAL MAGISTRATE SHOLINGANALLUR

## OS. No.385/*2024*

Deposition of Witness for Plaintiff/Defendant Solemnly Affirmed by Tmt. S.Ramalakshmi, Assistant in accordance with the provisions of Act X of 1873 on 24.06.2026.

| | | | |
|---|---|---|---|
| Name | மாதவன் | Religion | |
| Father Name | | Age | |
| Village | | Calling | |
| Taluk | | | DW1 CROSS |

<u>வாதி தரப்பு குறுக்கு விசாரணை</u>

1. பிரதிவாதி தீபா என்னுடைய மனைவி. நான் வன்னியர் வகுப்பை சேர்ந்தவன் என்றால் சரிதான். வாதி ராஜா நாயுடு வகுப்பை சேர்ந்தவர் என்றால் சரிதான். வழக்கு சொத்து எனது மனைவிக்கு பாத்தியப்பட்டது என்பதற்காக ஆவணம் ஏதேனும் தாக்கல் செய்து உள்ளேனா என்றால் செட்டில்மெண்ட் ஆவணம் தாக்கல் செய்துள்ளேன். எனது மனைவியின் பெயரில் நான் தான் செட்டில்மெண்ட் எழுதி வைத்தேன் என்றால் சரிதான். இந்த வழக்கு சொத்து எனக்கு எப்படி பாத்தியப்பட்டது என்று ஆவணம் ஏதேனும் தாக்கல் செய்து உள்ளேனா என்றால் பட்டா அ பதிவேடு சிட்டா அடங்கள் ஆகியவைகள் எனது பெயரில் உள்ளதை தாக்கல் செய்துள்ளேன். பிரதிவாதி தரப்பு சான்று ஆவணம் இரண்டு பட்டாவானது 2014 ஆம் ஆண்டு தான் கொடுக்கப்பட்டது என்றால் இவை எனது மனைவி பெயரில் கொடுக்கப்பட்ட பட்டாவாகும். அதற்கு முன்பே எனது பெயரில் கூட்டு பட்டாவாக இருந்தது. பிரதிவாதி தரப்பு சான்று ஆவணம் 4 அவை எனது பெயரில் உள்ள கூட்டு பட்டா என்றால் இவை அ பதிவேடு ஆகும்.

2. இவை வட்டாட்சியர் அலுவலகத்தில் இருந்து பெறப்பட்டவை இல்லை என்றால் வட்டாட்சியர் அலுவலகத்தால் தான் முத்திரைபோடப்பட்டுள்ளது. அதில் நீதிமன்றத்தால் கொடுக்கப்பட்டது என்றால் அது வட்டாட்சியர் அலுவலகத்தில் கொடுக்கப்பட்டது தான். பிரதிவாதி தரப்பு சான்று ஆவணம் 15 பட்டாவானது 2013 ஆம் ஆண்டு கொடுக்கப்பட்டது என்றால் சரிதான். இவை கூட்டு பட்டாவாகும். இந்தப் பட்டாவில் எனது பெயரோ எனது தந்தை பெயரோ இல்லை என்றால் சரியல்ல. தீபா, மாதவன், தீபாவின் தந்தை ராமசாமி ஆகியோர்கள் பெயர் இல்லை என்றால் சரியல்ல. மூன்றாவதாக எனது பெயர் உள்ளது. இவற்றில் மாதவனின் தகப்பனார் பெயர் ராமசாமி என்று குறிப்பிட்டுள்ளது என்றால் சரிதான். 2013 ஆம் ஆண்டு தான் மாதவன் பேரில் பட்டா கொடுக்கப்பட்டது என்றால் சரிதான். இதற்கு முன்பு ராமசாமி பெயரில் கொடுக்கப்பட்ட பட்டாவை நீதிமன்றத்தில் தாக்கல் செய்து உள்ளேனா என்றால் இல்லை. இந்த பட்டா பெற்ற பின்பு தான் எனது மனைவி பெயரில் 21.6.2013 அன்று செட்டில்மெண்ட் செய்துள்ளேன் என்றால் சரிதான். செட்டில்மெண்ட் எழுதி வைத்த காலகட்டத்தில் இந்த இடம் காலி மனை என்றால் மாட்டு கொட்டவாக உபயோகித்து வந்தோம்.

3. அந்த ஆவணத்தில் காலி மனை என்று எழுதி உள்ளது என்றால் சரிதான். பிரதிவாதி தரப்பு சான்று ஆவணம் 6 சர்வே எண் 410/2 அவற்றை சொக்கம்மாள் நாகராஜன் என்பவருக்கு எழுதி வைத்த செட்டில்மெண்ட்பத்திரம் என்றால் சரிதான். இந்த பத்திரத்தில் வாதி ராஜேந்திரனின் கையெழுத்து சாட்சியாக இல்லை என்றால் சரிதான் . பிரதிவாதி தரப்பு சான்று ஆவணம் 3 அந்த பத்திரம் நாகராஜன் பத்மாவதிக்கு எழுதி கொடுக்கும் பத்திரம் என்றால் சரிதான். அதில் ராஜேந்திரன் சாட்சியாக கையொப்பம் செய்து உள்ளார். இந்த பத்திரம் எழுதிக் கொடுத்தபொழுது சார் பதிவாளர் அலுவலகத்திற்கு அவர் சென்ற விவரம் எனக்கு தெரியும் என்றால்

சரியல்ல. அந்த பத்திரத்தில் இரண்டாவது சாட்சியாக ராஜேந்திரன் கையொப்பம் செய்துள்ளதால் தான் இந்த பத்திரத்தை நான் தாக்கல் செய்துள்ளேன் என்றால் நாகராஜன் எனது அக்கா மகன் ஆவார். எனது பங்காளியின் பத்திரப்பதிவில் அவர் சாட்சியாக கையொப்பம் செய்துள்ளார். இந்த பத்திரம் எழுதி வைக்கும் பொழுது ராஜேந்திரன் ஆட்சேபனை செய்தாரா என்றால் அது எனக்கு தெரியாது. அப்படி ஆட்சேபனை செய்திருந்தால் எதற்காக சாட்சியாக கையொப்பம் செய்தார். ராஜேந்திரன் தகராறு செய்ததால் தான் நாகராஜன் பணம் கொடுத்து தான் சாட்சி கையொப்பம் வாங்கினார் என்றால் அதைப் பற்றி எனக்கு தெரியாது.

4. அவருடைய சொத்தாக இருந்தால் எதற்கு சாட்சி கையொப்பம் செய்ய வேண்டும். கிரயம் பத்திரம் தான் கொடுத்து இருக்க வேண்டும் . 2013 ஆம் ஆண்டு எனது பெயரில் பட்டா வாங்கிய பின்பு தான் கட்டிடம் கட்ட ஆரம்பித்தேன் என்றால் சரிதான். 2013 ஆம் ஆண்டு எனது மனைவி பெயரில் செட்டில்மெண்ட் எழுதி வைத்த பின்பு தான் கட்டிடம் கட்ட ஆரம்பித்தேன் என்றால் சரிதான். அதற்கு முன்பு கொட்டாய் கட்டியதற்கும் ஓடு வீடு கட்டிய எந்த விதமான வரி ரசீதும் அந்த நீதிமன்றத்தில் தாக்கல் செய்யவில்லை என்றால் தெருவில் இருந்து 300 அடி எங்களுடைய பங்காளிகள் இடம் தான் அது ஏரி கரைக்கு அருகில் உள்ளதால் அதிலிருந்து கட்டிடங்கள் இடிந்த பின்பு அதை குப்பை கொட்டுவதற்காக உபயோகித்து வந்தோம். அதிலிருந்தே கட்டிடங்கள் இடிந்து விட்டது. யாதவர் வகுப்பை சேர்ந்திருக்கும் பன்னீரகப்பை சேர்ந்தவர்களுக்கும் திருமண சம்பந்தம் ஏற்படாது என்று சொன்னால் சரிதான். இந்த பட்டாவில் உள்ள பெயர்கள் அனைத்தும் வன்னியர் வகுப்பை சார்ந்தவர்கள் கிடையாது.

5. யாதவர் வகுப்பை சார்ந்தவர்கள் என்றால் இரண்டு வகுப்பை சார்ந்தவர்களும் அந்த பட்டாவில் உள்ளனர். பிரதிவாதி தரப்பு சான்று ஆவணம்17

சிட்டாவில் உள்ள பெயர்கள் அவர்களில் இரண்டு வகுப்பை சார்ந்தவர்கள் உள்ளனர். இந்த வழக்கை தாக்கல் செய்து இடைக்கால உருத்துக்கட்டளை பெற்ற பின்பு தான் கட்டிடம் கட்ட ஆரம்பித்தேனா என்றால் அதற்கு முன்பு ஆரம்பித்து விட்டேன். எனது மனைவி பெயரில் செட்டில்மெண்ட் செய்து வைத்த பின்பே நான் அதில் கட்டிடம் கட்ட ஆரம்பித்து விட்டேன். இந்த வழக்கில் இடைக்கால உத்தரவு கட்டிடம் கட்டக்கூடாது என்று கொடுக்கப்பட்டுள்ளது என்றால் சரிதான். நான் அதற்கு முன்பே கட்டிடம் கட்டி விட்டேன். அந்த இடைக்கால உத்தரவுக்கு எதிராக மேல்முறையீடு செய்து உள்ளேன் என்றால் சரிதான். எனது பெயரில் பட்டா கொடுத்த பின்பு தான் 2016 ஆம் ஆண்டு தான் முதல் முதலில் சொத்து வரி கட்டி உள்ளேன் என்றால் சரிதான் . எனது பிரமாண வாக்கு மூலத்தில் வாதியின் தகப்பனார் பலராம் நாயுடு 30 ஆண்டுகளுக்கு முன்பே சொத்தை விற்பனை செய்துவிட்டு சென்றுவிட்டார் என்று குறிப்பிட்டுள்ளேன் என்றால் அதற்கு ஆவணம் தாக்கல் செய்துள்ளேன் என்றால் தாக்கல் செய்துள்ளேன்.

6. அந்த சொத்தை எனது பங்காளிக்கு தான் விற்பனை செய்து உள்ளார். அதன் நான்கு எல்லைகளில் எங்களுடைய வகையறாவின் பெயர் தான் குறிப்பிடப்பட்டுள்ளது. பிரதிவாதி தரப்பு சான்று ஆவணம் ஒன்று மற்றும் இரண்டு ஆவணங்கள் பல்ராம் நாயுடுவின் சொத்து இருக்கும் இடதுக்கும் சம்பந்தம் இல்லை என்றால் சரியல்ல. அவர்கள் தான் கருணாகரன் மற்றும் வரதன் என்பவருக்கு பத்திரப்பதிவு செய்து கொடுத்துள்ளனர். என்னுடைய பிரமாண வாக்குமூலத்தில் வாதி மற்றும் அவர் குடும்பத்தினரிடம் சந்தித்து பட்டா மாற்றம் செய்வது சம்பந்தமாக கேட்ட பொழுது அதற்கு அவர்கள் பணம் கேட்டார்கள் என்று குறிப்பிட்டு உள்ளேன் என்றால் சரிதான் . நாகராஜன் பத்மாவதிக்கு பத்திரம் எழுதி வைக்கும் பொழுது ராஜேந்திரனுக்கு பணம் கொடுத்து தான் சாட்சியாக கையொப்பம் செய்ய வைத்தார்கள் என்றால் அதைப் பற்றி எனக்குத் தெரியாது . வழக்கு சொத்து 2014

ஆம் ஆண்டு வரை காலி நிலமாக தான் இருந்தது. அதற்கு பின்பு தான் கட்டிடம் கட்ட ஆரம்பித்தேன் என்றால் சரிதான். அதில் கட்டிடம் இல்லை. ஆனால் நாங்கள் பயன்படுத்திக் கொண்டு வந்தோம்.

7. வழக்கு சொத்திற்க்கு முதல் முதலில் 2015 ஆம் ஆண்டு தான் மின் இணைப்பு பெற்றேன் என்றால் சரிதான். கட்டிடம் கட்டிய பின்பு தான் மின் இணைப்பு பெற முடியும். வழக்கு சொத்துக்கு முதல் முதலில் துணை வட்டாட்சியர் தான் பட்டா கொடுத்தார் என்றால் சரிதான். கூட்டு பட்டாவை பிரித்து தனி பட்டா கொடுப்பதற்கு துணை வட்டாட்சியருக்கு அதிகாரம் இல்லை என்றால் அதைப் பற்றி எனக்கு தெரியாது. பட்டா மாற்றம் செய்யும்பொழுது பட்டாவில் உள்ள மற்றவர்களுக்கு அறிவிப்பு அனுப்ப வேண்டும் என்றால் அந்த அறிவிப்பு அனுப்பிய பின்பு தான் அவர்கள் பணம் கேட்டார்கள். வழக்குசொத்து கிராம நத்தம் என்றால் சரியல்ல. பட்டா நிலமாகும் அந்த கிராமத்தில் கிராம நத்தம் நிலம் உள்ளது. ஆனால் என்னுடைய நிலம் பட்டா நிலம் ஆகும். பிரதிவாதி தரப்பு சான்று ஆவணம்4 அ பதிவேட்டில் சர்வே எண்410/1 மற்றும் 410/2 நிலத்தின் தன்மை குறித்து குறிப்பிடுகையில் கிராம நத்தம் என்று குறிப்பிட்டுள்ளது என்றால் சரியல்ல. சர்வே எண் 410/1 கிராம நத்தம் ஆகும்.

8. சர்வே எண்410/2 பட்டா நிலமாகும். சர்வே எண் 410 முழுவதும் வாதி குடும்பத்திற்கு சொந்தமான கிராம நத்த நிலமாகும். நான் துணை தாசில்தாரின் உதவியுடன் எனது பெயரில் பட்டா வாங்கி அதை எனது மனைவி பேரில் செட்டில்மெண்ட் எழுதி வைத்துள்ளேன் என்றால் சரியல்ல. இதே நிலத்தில் உள்ள ஒரு பகுதியை நாகராஜன் அவர்களது மனைவிக்கு செட்டில்மெண்ட் எழுதி வைத்த போது பயந்து தான் பணம் கொடுத்தார் என்றால் சரியல்ல. இடைக்கால உருத்து கட்டளை உத்தரவு தெரிவித்த பின்பு கட்டிடம் கட்டியதால் அந்த கட்டிடத்தை இடித்து வாதியிடம் சுவாதீனம் ஒப்படைக்க வேண்டும் என்றால் சரியல்ல. எனக்கு உரிமை இல்லாத சொத்தை எழுதி

வைத்ததால் அந்த பத்திரத்தை செல்லுபடி ஆகாத பத்திரம் என்று விளம்புகை செய்ய வேண்டும் என்றால் சரியல்ல.

<u>மறுவிசாரணை</u>: இல்லை

**Sd/-M.N.ராஜநந்திவர்மசிவா,**
**மாவட்ட உரிமையியல் மற்றும் குற்றவியல் நடுவர்,**
**சோழிங்கநல்லூர்.**